IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
|---|---|---|---|
| | | PW's | 1 |
| NAME | Rajathi | CASTE | |
| W/O | Chandran | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 01th day of April 2019

குறுக்கு விசாரணை: 01-04-2019

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

நான் திருப்பாச்சேத்தியில் வசித்து வருகிறேன். நான் சும்மாதான் வீட்டில் இருக்கிறேன். எனக்கு திருமணம் முடிந்து சோழவந்தானில் மூன்று மாதம் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். மூன்று மாதம் எந்த பிரச்சனையும் இல்லை நன்றாகத்தான் இருந்தேன். கல்யாணம் முடிந்து 6 மாதம் கழித்து பஞ்சாயத்து செய்தார்கள். நான் வீட்டில் இருக்கும்போது என் அம்மா, அப்பா வந்து செல்வார்கள். எனக்கு சூடு வைத்தார்கள் அதை நான் மருத்துவமனையில் சென்று காண்பிக்கவில்லை. சோழவந்தான் காவல்நிலையத்தில் சூடு வைத்ததை பற்றி புகார் எதுவும் கொடுக்கவில்லை. கல்யாணம் ஆகி ஆறு மாதம் கழித்து மானாமதுரைக்கு சென்றுவிட்டேன். கல்யாணம் செய்தபோது போட்ட நகைகளை இன்று வரை எதுவும் கொடுக்கவில்லை. முதன்முதலில் மானாமதுரை காவல்நிலையத்தில் தான் புகார்கொடுத்தோம். சமயநல்லூர் காவல்நிலையத்தில் இருந்து கோர்ட்டில்லேயே விசாரித்தார்கள். எனக்கு எந்த நோயும் இல்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன். சொன்னமாதிரி சொன்ன விசயத்தில் சொன்னதேதியில் எந்த சம்பவம் நடக்கவில்லை. நகை பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி உங்களுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார். நீங்கள் தான் கற்பனையான காரணங்களை நினைத்துக்கொண்டு வாழ மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.